# அம்ரிதா விஷ்வ வித்யபீடம் சார்பில் இன்டிகான் 2018 மாநாடு

**கோவை, ஜன. 5**

இன்ஸ்டிட்யூட் ஆ/ப் எலக்ட்ரிகல் அன்டு எலக்ட்ரானிக்ஸ் எஞ்ஜினியர்ஸின் இன்டிகான் 2018 என்ற மாநாடை நடத்தும் முதல் தனியார் பல்கலைக்கழகம் என்ற பெருமையை அம்ரிதா விஷ்வ வித்யபீடம் பெற்றுள்ளது. இந்த சர்வதேச மாநாடு, இன்ஸ்டிட்யூட் ஆ/ப் எலக்ட்ரிகல் அன்டு எலக்ட்ரானிக்ஸ் எஞ்ஜினியர்ஸ் இந்தியாவின் முத்திரை பதித்த மாநாடு ஆகும். அம்ரிதா ஸ்கூல் ஆ/ப் எஞ்ஜினீரிங்கின் எலக்ட்ரானிக்ஸ் அன்டு கம்யூனிகேஷன் எஞ்ஜினீரிங், எலக்ட்ரிகல் அன்டு எலக்ட்ரானிக்ஸ் எஞ்ஜினீரிங் மற்றும் கம்ப்யூட்டர் சயின்ஸ் அன்டு எஞ்ஜினீரிங் துறைகளால் ஒருங்கிணைத்து நடத்தப்படும் இந்த மாநாடுக்கு 862 ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் 300-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். இதில் 5 முழுமையான உரைகள், 12 சிறப்புரைகள், தொழில் சார்ந்த சிறப்புரை, 3 பயிலரங்குகள், 362 மறு ஆய்வுகள், 7 டிராக்குகள் மற்றும் 4 போஸ்டர் ஆகிய அமர்வுகள் அடங்கும்.

சமர்ப்பிக்கப்பட்ட அனைத்தும் ஆய்வுசெய்யப்பட்டு, ஆய்வாளர்களின் ஒட்டுமொத்த முடிவின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டன. ஏற்கப்பட்ட ஆய்வுகட்டுரை எழுதியவர்கள், தங்கள் ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டவற்றை தொகுத்தளித்து, வாய்மூலமாகவோ அல்லது போஸ்டர்கள் மூலமாகவோ பார்வையாளர்களுடன் கலந்துரையாடுவதற்கு அழைக்கப்பட்டு உரையாற்றினார்கள்.